
திருவள்ளுவர்

**திருக்குறள்**

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

அதிகாரம் - 46 - தெரிந்து செயல் வகை

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# மே செய்திமடல்

( சித்திரை - வைகாசி )

ஒரு செயலைச் செய்து முடிக்கும் வழியை அறிந்து தொடங்குக. தொடங்கியபின் அது பற்றி எண்ணிக் கொள்வோம் என்பது குற்றம்.

Think and act;
to act and then to think is folly.

## பள்ளியின் அறிவிப்புகள் !!

1. தமிழ்ப்பள்ளியின் 8 ஆண்டுகால வரலாற்றில் இரண்டாவது பொது உறுப்பினர் கூட்டம் மே 3 ஆம் தேதி நடைபெற்றது. துணைச் சட்டத் திருத்தங்களுக்கான வாக்கெடுப்பு கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு விரைவில் அனுப்பப்படும்.

2. ஆண்டு விழாப் போட்டிகள் மே 2 மற்றும் மே 3 ஆகிய தேதிகளில் வெற்றிகரமாக நடத்தப்பட்டன, வெற்றியாளர்களின் பட்டியல் அனைத்து பெற்றோருக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

3. பள்ளி ஆண்டுமலர் தன்னார்வக்குழு இந்த ஆண்டின் புத்தகத்தை வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளது. உங்கள் நகலை எவ்வாறு பெறுவது என்பது பற்றிய கூடுதல் விவரங்களுக்கு காத்திருங்கள்.

4. எதிர்பாராத சூழ்நிலைகளால் மே 9 ஆம் தேதி புதிய பள்ளி வளாகத்தில் திட்டமிடப்பட்டிருந்த சோதனை வகுப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது.

5. பள்ளி ஆண்டு விழா ஜூன் 7 ஆம் தேதி நடக்க திட்டமிடப்பட்டுள்ளது, ஆசிரியர்கள் தங்கள் வகுப்புக்கான நிகழ்ச்சிகளை தீர்மானிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர், இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதில் ஆசிரியர்களின் யோசனைகள் மற்றும் முயற்சிகளுக்கு அனைத்து பெற்றோர்களும் தங்கள் ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

## கதை படிப்போம் !



ஒரு தாயும் மகனும் மட்டும் வசித்த வீடு அது. ஏழைக்குடும்பம். வீட்டுத்தலைவர் சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். இப்போது தாய்க்கும் உடல் நிலை சரியில்லை.

மரணத்தருவாயில் இருந்த தாயிடம் அம்மா நீயும் என்னைவிட்டுப் போய்விடாதே. நீயும் போய்விட்டால் நான் அனாதையாக ஆகிவிடுவேனே? என அவளது கையைப் பிடித்து அழுதான் அவளது பதினைந்து வயது மகன்.



தாய் சொன்னாள். மகனே, எந்தச் சூழ்நிலையிலும் கலக்கம் கூடாது. ஜப்பானிலுள்ள ஹிரோஷிமாவும் நாகசாகியும் எத்தனை அனாதைகளை உருவாக்கியது தெரியுமா? அவர்களெல்லாம் வாழாமல் போய்விட்டார்களா? ஒன்றை மட்டும் புரிந்துகொள். உன் தந்தை அடிக்கடி என்னிடம் ஒரு விஷயத்தை சொல்வார். அதையே உனக்கு சொல்கிறேன் என்ற தாயிடம் அந்த துயரமான சூழ்நிலையையும் மறந்து அவள் சொல்வதைக் கேட்க ஆர்வமானான் மகன்.

மகனே நீ ஒரு கலைஞனாகி விடு பிழைத்துக் கொள்வாய். அதற்காக பெரிய கலைஞன் ஆக வேண்டும் என சொல்லவில்லை. உனக்கு கழிவறை சுத்தம் செய்யும் பணி கிடைத்தால் கூட அதையும் பாக்கியமாக கருதி ரசித்து செய். நீ சுத்தம் செய்வது போல வேறு யாரும் அதை சுத்தம் செய்ய முடியாதபடி இருக்கவேண்டும். உன் வேலையில் ஒரு தனித்துவம் வெளிப்பட வேண்டும் என்றாள். ஆம் உங்கள் வேலையை ரசித்து செய்யுங்கள். ரசித்து செய்யும் வேலையில் தான் சுகமும் திருப்தியும் இருக்கிறது.


நீ அடைய நினைத்த இலக்கை அடையும் வரை, கல் வந்தாலும் சொல் வந்தாலும் கலங்காமல் நீ முன்னேறு.


RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி


**மே செய்திமடல்**
**( சித்திரை - வைகாசி )**


Until the goal is reached, do not care about the stones and words thrown at you. Move forward without panic.


# மாணவர்களின் படைப்புகள் !!



# நிலை 4

வெற்றிக்கான நிரந்தர வழி
தோல்வி அடைந்த பிறகும்,
இன்னும் ஒரு முறை முயற்சி
செய்வதே.

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# மே செய்திமடல்

( சித்திரை - வைகாசி )

Success is the permanent
way to try one more time,
even after failure.

## முத்தமிழ்முத்துக்கள்

### பொய்க்கால் குதிரை ஆட்டம்







தமிழ்நாட்டுப்புறக் கலை வடிவங்களில் பொய்க்கால் குதிரை ஆட்டம் ஒன்றாகும். ஆணும் பெண்ணும் இராசா இராணி போன்று வேடமிட்டு, குதிரை போன்ற உருவத்தைச் சுமந்து கொண்டு, கால்களில் கட்டையைக் கட்டிக் கொண்டு, உண்மையான கால்களில் நின்று ஆடாமல், பொய்யான கால்களில் நின்று கொண்டு, குதிரைச்சவாரி செய்வது போல் பாசாங்கு செய்து ஆடப்படும் ஆட்டம் பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆகும். இந்த ஆட்டம் தஞ்சாவூரில் தோன்றியதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆட்டத்தை புரவியாட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ஆட்டம் வழிபாட்டுக் கலையாக அல்லாமல் பொதுமக்கள் கண்டுகளிக்கும் பொருட்டு ஏற்பட்ட ஆட்டமாகப் பொய்க்கால் குதிரை ஆட்டம் விளங்குகிறது. மேலும் பொய்க்கால் குதிரை ஆட்டத்தைச் சித்தரித்து சென்னை கல்லூரி சாலையில் சிலை வைக்கப்பட்டுள்ளது. பொய்க்கால் குதிரையாட்டத்திற்குக் கோந்தளம், இரு தவில்கள், இரு நாகசுரங்கள், பம்பை, கிடுகிட்டி எனப்படும் இரட்டை முகத்தோல் கருவி பக்க இசையாகப் பயன்படுகிறது.

## நினைவு நாளேடு

### மனநல விழிப்புணர்வு மாதம்:

அமெரிக்காவில், பல மனநல அமைப்புகள் 1949ஆம் ஆண்டு முதல் மே மாதத்தை "மனநல விழிப்புணர்வு மாதமாக" கடைப்பிடித்து வருகின்றன. இது மன நலனின் முக்கியத்துவத்திற்கு மிகவும் தேவையான கவனத்தை ஈர்க்கிறது.

நன்றாகச் சாப்பிட்டு, உடற்பயிற்சி செய்து, தேவைப்படும்போது மருத்துவரைப் பார்ப்பதன் மூலம் நம் உடல் ஆரோக்கியத்தைப் பேணுவது போல, மன ஆரோக்கியத்திற்கும் கவனம், புரிதல் மற்றும் கவனிப்பு தேவையை உணர்த்துகிறது.

மனநலம் பற்றி நாம் எவ்வளவு அதிகமாகப் பேசுகிறோமோ, அவ்வளவு அதிகமாக களங்கத்தைக் குறைத்து, தனிநபர்கள் உதவி பெற ஆதரவளிக்கப் பட்டதாகவும் அதிகாரம் பெற்றதாகவும் உணரும் ஒரு கலாச்சாரத்தை உருவாக்க முடியும்.

## மே மாதம்

### மலர்ந்த மொட்டுக்கள் :

- அகிலன் அரவிந்த்
- நலீஷா பிரெம் கிருஷான்
- ராஜலட்சுமி வெங்கடகிருஷ்ணன்
- ரிதுன் ஜீவா
- ருத்விக் பாலசந்தர்
- ஸ்ரீதர் வாசுதேவன் வெங்கடகிருஷ்ணன்

மே மாதத்தில் பிறந்தநாள் கொண்டாடும்
நம் பள்ளி செல்வங்களுக்கு,
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

## ஏப்ரல் மாதத்தின் விடைகள் :

### குறுக்கெழுத்துப்போட்டி

**Down**
1.கொத்தமல்லி
2. அவரைக்காய்
3.செங்கிழங்கு
5. பூசணிக்காய்
7.பேரிக்காய்
9.வாழைத்தண்டு
11.பப்பாளி
13.வெங்காயம்
15.முள்நாறிப்பழம்

**Across**
2. அவுரிநெல்லி
4.அத்திபழம்
6.பூக்கோசு
8.புடலங்காய்
10. புடலங்காய்
12.கத்திரிக்காய்)
14.வெண்ணெய்பழம்
16. குமளிப்பழம்
18.காளான்
20.பட்டாணி
21.சப்போட்டா
22.பரங்கிக்காய்

### வார்த்தை ஜாலம்!

1.மாநகரம் 2.பூந்தோட்டம் 3.திமிங்கலம்
4.கடக்குதிரை 5.மின்சாரம்.

## பள்ளி அட்டவணை மே மாதம்


**May 25**

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |
| | | | | | | |

RITamilSchool Calendar

## கண்டுபிடி:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பு | றா | சா | ன் | பூ | ட் | டு | லி |
| சு | ண் | டெ | லி | மை | ன் | ப | க |
| ய | ம் | க் | ரா | கி | ளி | கா | ட |
| நா | தா | எ | ச | ட் | சா | லி | ல் |
| சே | வ | ல் | பி | யி | ப | னு | மீ |
| னி | வே | ன் | து | ச | ட் | டை | பா |
| மா | பு | லி | வி | னா | ட | த் | கு |
| ர் | ச | த | ன் | னி | ம் | ச் | டை |



உங்கள் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன:
கதைகள், கட்டுரைகள், வரைபடங்கள், விடுகதைகள், சிறு குறிப்புகள், குறுஞ்செய்திகள் போன்ற உங்கள் படைப்புகளை 15-ஆம் தேதிக்குள் NEWSLETTER.RITAMILSCHOOL@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இணையதளம்: HTTPS://WWW.RITAMILSCHOOL.ORG/
முகநூல்: HTTPS://WWW.FACEBOOK.COM/RITAMILSCHOOL